அ.சா.1 நாள் 22.07.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 35/2025 | | |
| பெயர் | செல்வமுருகன் | த/பெ. | வீரப்பன் |
| வயது | 45 | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | நாங்கூர் | தாலுக்கா | சீர்காழி |

**(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் நாங்கூரில்வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் 08.01.2024 அன்று தடம் எண். A16 சீர்காழியிலிருந்து கீழமூவர்க்ரை செல்லும் TN 68 N 0104 என்ற அரசு பேருந்தில் ஓட்டுநராக பணி நியமிக்கப்பட்டு நான் மேற்படி பேருந்தினை கீழமூவர்க்கரைக்கு நடை எடுத்துச்சென்று மீண்டும் மாலை 4.45 மணியளவில் சீர்காழிக்கு நடை சென்றபோது சுமார் 5.30 மணியளவில் அண்ணம்பெருமாள் கோவில் அருகில் நான் அரசு பேருந்தினை ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்தேன். காடுவெட்டி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கினேன். அப்போது எதிரே இருச்சக்கர வாகனத்தில் வந்த மூன்று பசங்க ஏன் வண்டியை இங்கு நிறுத்தினீர்கள் என்று சொல்லி மரியாதை இல்லாமல் குச்சிக்காரி மவனே என்று அசிங்கமாக பேசினார்கள். பேருந்தின் வலதுபுற கண்ணாடியை கையால் எதிரிகள் உடைத்தார்கள். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் என் சட்டைய பிடித்து கீழே இறங்கி வா என்று சொன்னார்கள். நடத்துனர் வந்து என்ன பிரச்சினை என்று கேட்டபோது எதிரிகள் நடத்துனரையும் சட்டையை பிடித்து அடித்துவிட்டார்கள். அங்கிருந்த ஊர்பொதுமக்கள் வந்தவுடன் அந்த பசங்க அங்கிருந்த ஓடிவிட்டார்கள். பின்னர், அங்கிருந்தவர்களை விசாரித்து அவர்களது பெயர் தெரிந்துக்கொண்டேன். மேற்படி சேதத்தின் மதிப்பு ரூ.3000/– இருக்கும். எங்களுடைய கிளை மேலாளருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர், வைத்தீஸ்வரன் காவல் நிலையம் சென்று புகார்

CJM, MAYILADUTHURAI. V. Selvamu

கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

மறு விசாரணை :–

**இல்லை.**

V. Sowamu

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/7/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

அ.சா.2

நாள் 22.07.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 35/2025 | | |
| பெயர் | மதியழகன் | த/பெ. | செல்லப்பன் |
| வயது | 53 | தொழில் | நடத்துனர் |
| கிராமம் | இளந்தோப்பு | தாலுக்கா | மயிலாடுதுறை |

**(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் இளந்தோப்பில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் 08.01.2024 அன்று தடம் எண். A16 சீர்காழியிலிருந்து கீழமூவர்க்ரை செல்லும் TN 68 N 0104 என்ற அரசு பேருந்தில் நடத்துனராக பணி நியமிக்கப்பட்டு, செல்வமுருகன் என்பவர் பேருந்தினை கீழமூவர்க்கரைக்கு நடை எடுத்துச்சென்று மீண்டும் மாலை 4.45 மணியளவில் கீழமூவர்க்கரையில் இருந்து சீர்காழிக்கு நடை சென்றபோது சுமார் 5.30 மணியளவில் அண்ணம்பெருமாள் கோவில் அருகில் செல்வமுருகன் அரசு பேருந்தினை ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்தார். காடுவெட்டி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கினோம். எதிரே இருச்சக்கர வாகனத்தில் வந்த பசங்க பேருந்தின் வலதுபுற கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் என ஓட்டுநர் என்னிடம் சொன்னார். நான் யார் என்ன என்று அந்த பசங்களிடம் கேட்டேன் அதில் ஒரு நபர் என்னை பிடித்து தள்ளினார். மேற்படி சேதத்தின் மதிப்பு ரூ.3500/– இருக்கும். எங்களுடைய கிளை மேலாளருக்கு தகவல் தெரிவித்தேன். பின்னர், வைத்தீஸ்வரன் காவல் நிலையம் சென்று ஓட்டுநர் புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

CJM, MAYILADUTHURAI.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

22/7/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.